

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – பங்குனி 17 – செவ்வாய்க்கிழமை 31 மார்ச் 2026 – கோவை ★ ★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 229 : Thiruvalluvar Year - 2057 - Panguni 17 - Tuesday 31 March 2026 - Kovai ★ ★ 16 Pages ₹ 5.00




கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (29.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில், தமிழ்நாடு சட்டப் பேரவை பொதுத்தேர்தல் 2026க்கான தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர்கள் – கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுத் தலைவர் – கனிமொழி கருணாநிதி எம்.பி., திருச்சி சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தேர்தல் தயாரிப்புக் குழு உறுப்பினர்கள், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



‘இல்லத்தரசி’ திட்டம் – வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்க ரூ.8000 கூப்பன்!



‘காலை உணவுத் திட்டம்’ 8 ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும்!



கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும்!



நெல், கரும்பு, பால் கொள்முதல் விலை உயர்த்தப்படும்!



1.5 லட்சம் அரசு காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!



விவசாயிகளுக்கு எவ்வித மீட்டரும் பொருத்தப்படாத நவீன மின்சாரப் பம்பு செட்டுகள்!

# தி.மு.க. தேர்தல் அறிக்கை - சூப்பர் ஸ்டார்!

**சென்னை, மார்ச் 31-**

**2026 சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் (29-03-2026) மாலை, சென்னை, அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில் வெளியிட்டு, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “இல்லத்தரசி திட்டம் மூலம் மகளிர் வீட்டு உபயோகப் பொருள்கள் வாங்க ரூ.8000 கூப்பன் வழங்கப்படும் - ‘காலை உணவுத் திட்டம்’ 8 ஆம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்படும் - கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தப்படும் - நெல், கரும்பு, பால் கொள்முதல் விலை உயர்த்தப்படும் - 1.5 லட்சம் அரசு காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்” என்றும், “தி.மு.க. தேர்தல் அறிக்கைதான் இந்தத் தேர்தலில் “சூப்பர் ஸ்டார்” ஆக களம் இறங்கியிருக்கிறது” என்றும் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

கழகத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:

## கழகத் தேர்தல் அறிக்கையை வெளியிட்டு
## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் - பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா - தமிழினத் தலைவர் கலைஞர் ஆகியோர் உருவாக்கித் தந்த பாதையில், கொள்கைத் தடம் மாறாமல், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தலைமைப் பொறுப்பிலிருந்து, வழிநடத்தி, ஆறாவது முறையாகக் கழகத்தை ஆட்சியில் அமர வைத்து, ‘திராவிட மாடல்’ எனப் பெயரிட்டு, தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் நடைபோட வைத்து, தமிழ்நாட்டை முதன்மை இடத்திற்கு நான் கொண்டு வந்திருக்கிறேன்.



இந்தப் பெருமித உணர்வோடு 2026-ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றத்தின் 17-ஆவது சட்டப்பேரவைத் தேர்தலுக்கான எங்கள் வாக்குறுதியை நான் வெளியிடுகிறேன். நடைபெற இருக்கும் தேர்தலில் வெற்றிபெற்று ஏழாவது முறையாக ஆட்சியமைக்க இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம்!

இந்த நம்பிக்கை, கழகத்தினருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழ்நாட்டு மக்களுக்கும் இருக்கிறது! ஏனென்றால், இது வரையில் எந்த மாநில அரசும் இந்த அளவிற்கு மாபெரும் சாதனைகளை நிகழ்த்தியதில்லை என்று பெருமையோடு சொல்லும் அளவிற்கு, ஏராளமான சாதனைத் திட்டங்களைத் திராவிட மாடல் ஆட்சியில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்!

பல மேடைகளில் அந்தத் திட்டங்களையெல்லாம் பட்டியலிட்டுச் சொல்லியிருந்தாலும், ஒரு சிறிய ரீவைன்ட் போன்று, தலைப்புச் செய்தியாகச் சில திட்டங்களை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்…

- **கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்**
- **விடியல் பயணம்**
- **காலை உணவுத் திட்டம்**
- **புதுமைப்பெண்**
- **தமிழ்ப்புதல்வன்**
- **நான் முதல்வன்**
- **இல்லம் தேடிக் கல்வி**
- **மக்களைத் தேடி மருத்துவம்**
- **இன்னுயிர் காப்போம் – நம்மைக் காக்கும் 48**
- **கலைஞர் கனவு இல்லம்**
- **தாயுமானவர் திட்டம்**
- **கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் திட்டம் என்று, ஒவ்வொரு துறை சார்பிலும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டை வளர்த்தெடுத்திருக்கிறோம்.**

அதனால்தான், நம்முடைய வளர்ச்சியை யாராலும் தடுக்கவும் முடியவில்லை; மறைக்கவும் முடியவில்லை! நாட்டிலேயே டபுள் டிஜிட் வளர்ச்சியில் சொல்லும் ஒரே மாநிலமாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு இருக்கிறது!

2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போதே, பத்தாண்டுகளுக்கான இலக்குகளை நிர்ணயித்துதான் இந்தப் பயணத்தை நாங்கள் தொடங்கினோம்! அதற்கான - தொலைநோக்குத் திட்டங்களை வகுத்தோம். ஒவ்வொரு தனி மனிதரும் பயனடையும் திட்டங்களை உருவாக்கினோம்.

**தொடர்ச்சி 4–ஆம் பக்கம்**

## “தமிழ்நாட்டை முதன்மை இடத்திற்கு நான் கொண்டு வந்துள்ளேன்!
## தி.மு.க 7 வது முறையாக ஆட்சி அமைக்கும்!”